**அன்ரி லெகோ மீற்றரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அன்ரி லெகோ மீற்றரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி உரிய ஆவணச் சான்றாதாரங்களுடன் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களை ஒழுங்கான முறையில் பேணியிருக்கவில்லை. | தொடர்புடைய ஆவணச் சான்றாதாரங்களுடன் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களை பேணுவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்வோம். | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் முறையாக பேணப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி நிலையான சொத்து பதிவேட்டை முறையாக பேணியிருக்கவில்லை. | நிலையான சொத்து பதிவேட்டில் சொத்துகளின் இருப்பிடத்தை மிகவும் சரியாக நாங்கள் குறிப்பிடுவோம். | நிலையான சொத்து பதிவேடு சரியாக நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 33,659,485 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 84,610,176 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 50,950,691 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. தொற்றுநோய் நிலைமை காரணமாக மீற்றர் விற்பனை வருமானம் குறைவடைந்தமை மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய நிர்வாகச் செலவினங்கள் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டிற்கான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 22 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. அதேநேரம் விற்பனை கிரயம் 20 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டுக்கான மொத்தலாபம் 45 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான ஏனைய செயற்பாட்டு வருமானம் 48 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. கழிவு விற்பனை குறைவடைந்தமையே இவ் வீழ்ச்சிக்கான முக்கிய காரணமாகும்.

(இ) கம்பனியின் நிதி வருமானம் 10 சதவீதத்தாலும், கம்பனியின் நிதிக் கிரயம் 52 சதவீதத்தாலும் குறைவடைந்துள்ளது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) கம்பனியின் மொத்தலாப விகிதம் அதன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 9 சதவீதத்தில் இருந்து 6 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது. அதன் பிரகாரம் தேறியலாப எல்லை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 4 சதவீதத்தில் இருந்து 2 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உரிமை மீதான திரும்பல் 11 சதவீதத்தில் இருந்து 5 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வளங்கள் முகாமைத்துவம்

| தொடர் இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி∴12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (ளுழுசீ) கம்பனியிடம் இருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (ளுழுசீ) தயாரிக்கப்பட்டதுடன் அடுத்த சபைக் கூட்டத்தில் கலந்துரையாடி அங்கீகரிப்பதற்காக இது சமர்ப்பிக்கப்படும். | கம்பனி சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி∴12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் விரிவான கட்டுப்பாடு மற்றும் நிர்வாக நடைமுறைகள் கையேடொன்று கம்பனியிடம் இருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைத்திருக்கவில்லை. | கம்பனி சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி∴12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் குறிப்பிடப்பட்டவாறு கம்பனி ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி∴12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக கம்பனியால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் அடுத்த யுடுஆஊ சபைக் கூட்டத்தில் இது சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். |

### 4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி∴12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக கம்பனியால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் அடுத்த யுடுஆஊ சபைக் கூட்டத்தில் இது சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். |

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனி உள்ளக கணக்காய்வு பிரிவை நிறுவியிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை நாங்கள் வெளிநபர்களிடம் வழங்கியிருந்தோம். தற்போது நிதிக் கணக்காய்வுகள் மற்றும் ஐளுழு தர முகாமைத்துவ கணக்காய்வுகள் அரையாண்டு ரீதியாக முகாமைத்துவ மீளாய்வுக் குழுவால் மீளாய்வு செய்யப்படுகின்றன. | உள்ளக கணக்காய்வு பிரிவை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.5 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி∴12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனி கணக்காய்வுக் குழுவை உருவாக்கியிருக்கவில்லை. | தற்போது நிதிக் கணக்காய்வுகள் மற்றும் ஐளுழு தர முகாமைத்துவ கணக்காய்வுகள் அரையாண்டு ரீதியாக முகாமைத்துவ மீளாய்வுக் குழுவால் மீளாய்வு செய்யப்படுகின்றன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். |

## 4.6 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (ளுனுபு) தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் ”2030 நிகழ்ச்சி நிரல்” இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் அதன் நோக்கெல்லையின் கீழ் இலக்குகள் மற்றும் செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதில் பங்களிக்க வேண்டும். எனினும், கம்பனி ளுனுபு ஐ அமுல்ப்படுத்தியிருக்காததுடன் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள், அந்த இலக்குகளை அடைந்துகொள்வதில் உள்ள இடைவெளிகள் மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்குப் பொருத்தமான குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | கம்பனிக்கு பொருத்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்படும். | கம்பனி நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ உடன் இணங்குதல் வேண்டும். |